திமுக கூட்டணிக்குச் சாதகமாக தேர்தல் களம்

முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை கொளத்தூரில் திங்கள்கிழமை திறந்த வாகனத்தில் பிரசாரம் செய்த திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின்.

சென்னை, மார்ச் 30: திமுக கூட்டணிக்கு சாதகமாக தேர்தல் களம் உள்ளது என திமுக தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

கொளத்தூர் சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிடுவதற்காக திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் திங்கள்கிழமை வேட்புமனு தாக்கல் செய்தார். இத்தொகுதியில் அவர் நான்காவது முறையாகப் போட்டியிடுகிறார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு, முன்னாள் அரசு தலைமை வழக்குரைஞர் ஆர்.சண்முகசுந்தரம், திமுக சட்டத் துறை மாநிலச் செயலர் என்.ஆர்.இளங்கோ, கொளத்தூர் தொகுதிப் பொறுப்பாளர் ஆர்.விடுதலை ஆகியோர் உடனிருந்தனர்.

திமுகவுக்கே வெற்றிவாய்ப்பு: வேட்புமனு தாக்கல் முடிந்த பின்னர், செய்தியாளர்களிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியதாவது:

சென்னை கொளத்தூரில் 4-ஆவது முறையாக மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் நிறுத்தப்பட்டுள்ளேன். முந்தைய தேர்தல்களைப் போல, இந்த முறையும் மக்கள் எனக்கு அதிக ஆதரவளித்து வெற்றி பெறச் செய்வர். தமிழகத்தில் பலமுனைப் போட்டி என்பதால், திமுக கூட்டணிக்கே தேர்தல் களம் சாதகமாக உள்ளது. ஆகவே, தமிழகத்தில் மீண்டும் திமுக ஆட்சி அமைவது உறுதி. தமிழக உரிமைகளை மீட்கும் வகையில் மக்கள் பெரிய வெற்றியை வழங்குவர். திமுக கூட்டணி 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறும் என்றார்.

பிரசாரம் தொடக்கம்: தொடர்ந்து, திறந்த ஜீப்பில் ஏறி சாலையில் கூடியிருந்த திமுக, கூட்டணிக் கட்சிகளின் தொண்டர்கள் மற்றும் பொதுமக்களிடம் கையசைத்து ஆதரவு கோரினார். அப்பகுதியில் அமைக்கப்பட்ட சிறிய மேடையில், கொளத்தூர் தொகுதியில் கடந்த 4 ஆண்டுகளில் தான் செய்த சாதனை குறித்த கையேட்டை அவர் வெளியிட்டார்.

முதல் நாளில் 5 மனுக்கள்: கொளத்தூர் தொகுதியில் முதல் நாளில் 5 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

முதல்வர் ஸ்டாலின், தனது பெயரில் 3 மனுக்களைத் தாக்கல் செய்தார்.

நாம் தமிழர் கட்சி சார்பில் சௌந்தரபாண்டியன் லூடர் சேட், வீரத் தியாகி விஸ்வநாத தாஸ் தொழிலாளர்கள் கட்சி சார்பில் எழுமலை ஆகியோர் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலினின் சொத்து மதிப்பு எவ்வளவு?

திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலினுக்கு அசையும் சொத்து ரூ.3.30 கோடியும், அசையாச் சொத்து ரூ.4.33 கோடியும் உள்ளதாக அவரது வேட்புமனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொளத்தூர் தொகுதிக்கான வேட்பு மனுவை திங்கள்கிழமை தாக்கல் செய்த முதல்வர் மு.க.ஸ்டாலின், படிவம் 26 சத்தியப் பிரமாணத்தில் தனது வருவாய், சொத்து விவரங்களை குறிப்பிட்டுள்ளார். அதன்படி அவருக்கு மயிலாப்பூர் தொகுதியில் வாக்கு இருப்பதை குறிப்பிட்டுள்ளார். கடந்த 2020–21 ஆம் ஆண்டில் அவரது வருமான வரிக்கணக்கில் காட்டப்பட்ட மொத்த வருவாய் ரூ.27.34 லட்சம் என்ற நிலையில், கடந்த 2024–25 ஆம் ஆண்டில் ரூ.5.33 லட்சமாகக் காட்டப்பட்டுள்ளது. குற்றவியல் வழக்குகள் இல்லை எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

அசையும் சொத்துகள் விவரங்களில் அவரது கையில் ரூ.10 ஆயிரமும், அவரது மனைவி துர்கா ஸ்டாலின் கையில் ரூ.40 ஆயிரமும் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவரது வங்கிச் சேமிப்புக் கணக்கு, அஞ்சுகம் குடும்ப அறக்கட்டளை பங்கு மதிப்பு, தயாளு குடும்ப அறக்கட்டளை பங்கு மதிப்பு என அசையும் சொத்து ரூ.3.30 கோடியாகவும், அவரது மனைவி துர்கா ஸ்டாலின் பெயரில் அசையும் சொத்தாக வங்கிச் சேமிப்புக் கணக்கில் ரூ.47.75 லட்சம் மற்றும் பழைய தங்கநகைகள் 750 கிராம் மதிப்பு ரூ.84.52 லட்சம் என மொத்தம் ரூ.1.32 கோடி உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்டாலினின் சொத்து மதிப்பு நடப்பு சந்தை நிலவரப்படி ரூ.2.96 கோடி, துர்கா ஸ்டாலின் சொத்து மதிப்பு ரூ.2.11 கோடி என குறிப்பிடப்பட்டுள்ளது. நிறுவனங்கள் அவரது பெயரில் இல்லை என்றும், அரசுக்குச் செலுத்தவேண்டிய தொகை இல்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. படிவம் பி எனும் பகுதியில் அசையாச் சொத்து என ரூ.4.33 கோடியும், அவரது மனைவி துர்கா ஸ்டாலினுக்கு ரூ.2.28கோடியும் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

திமுக கூட்டணி கட்சித் தலைவர்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை

சென்னை, மார்ச் 30: திமுக கூட்டணி கட்சிகளின் தலைவர்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் திங்கள்கிழமை ஆலோசனை நடத்தினார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தமிழக காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை, தேமுதிக பொருளாளர் எல்.கே.சுதீஷ், விசிக தலைவர் தொல். திருமாவளவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலர் பி.சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலர் மு.வீரபாண்டியன், மநீம தலைவர் கமல்ஹாசன்உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில், முதல்வர் மு.க. ஸ்டாலின் பேசியதாவது: இக்கூட்டணி புதிதாக அமைக்கப்பட்ட கூட்டணி அல்ல. தொடர்ந்து 2 மக்களவைத் தேர்தல்கள், 2021பேரவைத் தேர்தல், இடையிலே உள்ளாட்சி அமைப்புத் தேர்தல், இடைத்தேர்தல்கள் எனத் தொடர்ந்து ஒரு மாபெரும் கூட்டணியை அமைத்து, இதுவரைதமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்திய அளவிலே கூட இல்லாத வகையிலே இவ்வளவு ஆண்டு காலம் தொடரும் ஒரு கூட்டணியாக இந்த மதச்சார்பற்ற கூட்டணி அமைந்துள்ளது.

தற்போது இன்னும் சில கட்சிகள் இணைந்திருப்பதன் மூலம் இந்தக் கூட்டணியை மிக வெற்றிகரமாக அமைத்திருக்கிறோம். 200-க்கும் மேற்பட்ட தொகுதிகளில் திமுக கூட்டணி எளிதில் வெற்றிபெறும் என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

திமுக கூட்டணிக்கு பழ.நெடுமாறன், செ.கு.தமிழரசன் ஆதரவு

சென்னை, மார்ச் 30: திமுக கூட்டணிக்கு தமிழர் தேசிய முன்னணி நிறுவனர் பழ.நெடுமாறன், இந்திய குடியரசு கட்சித் தலைவர் செ.கு.தமிழரசன் உள்ளிட்டோர் திங்கள்கிழமை ஆதரவு தெரிவித்தனர்.

சென்னை அண்ணா அறிவாலயத்துக்கு வந்த தமிழர் தேசிய முன்னணி நிறுவனர் பழ.நெடுமாறனை திமுக தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் வாசலுக்கே வந்து வரவேற்று அழைத்துச் சென்றார். பின்னர், பழ.நெடுமாறன், தமிழர் தேசிய முன்னணி தலைவர் செ.ப.முத்தமிழ்மணி ஆகியோர் நடைபெறவுள்ள 2026 சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஆதரவுக் கடிதம் அளித்தனர்.

செ.கு.தமிழரசன்: அதைத் தொடர்ந்து, முதல்வர் ஸ்டாலினை இந்திய குடியரசுக் கட்சியின் மாநிலத் தலைவர் செ.கு.தமிழரசன் சந்தித்து திமுக கூட்டணிக்கு ஆதரவு அளித்தார்.

அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, ஒடுக்கப்பட்டவர்களுக்காக உழைத்துவரும் இயக்கம் திமுக. எனவே, திமுகவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளோம் என்றார்.

இந்திய சமூகநீதி இயக்கத்தின் தலைவர் பேராயர் கதிரொளி மாணிக்கம் மற்றும் நிர்வாகிகள், உருது மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் உபைதுல்லா பைக் மற்றும் மாநில நிர்வாகிகள் உள்ளிட்டோர் முதல்வர் ஸ்டாலினை சந்தித்து, திமுக கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.

அப்போது, திமுக அமைப்புச் செயலர் ஆர்.எஸ்.பாரதி, திராவிட இயக்கப் பேரவைப் பொதுச் செயலர் சுப.வீரபாண்டியன், திமுக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், சென்னை கிழக்கு மாவட்டச் செயலர் பி.கே.சேகர்பாபு, விசிக தலைவர் தொல்.திருமாவளவன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

தோல்வி அச்சத்தால் 23 கட்சிகளுடன் திமுக கூட்டணி

சிவகங்கை, மார்ச் 30: தோல்வி அச்சம் காரணமாக 23 கட்சிகளுடன் திமுக கூட்டணி அமைத்துள்ளதாக நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிடும் அவர், தனது வேட்புமனுவை தேவகோட்டை வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை தாக்கல் செய்தார். சீமானின் தாய் அன்னம்மாள், மனைவி கயல்விழி, மாநில நிர்வாகிகள் ஹுமாயூன், சாட்டை துரைமுருகன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

பின்னர், செய்தியாளர்களிடம் சீமான் கூறியதாவது: தமிழகத்தின் கடன் சுமை தற்போது சுமார் ரூ. 10.5 லட்சம் கோடியாக உள்ளது. மீண்டும் இலவசங்களை அறிவித்தால் அவற்றை எப்படிச் செயல்படுத்த முடியும்? மீண்டும் கடன் வாங்க வேண்டும். மக்களின் மீது மேலும் வரிகளை விதித்து, வளத்தை சுரண்டுவதைத் தவிர வேறு என்ன நடக்கப்போகிறது?

மிக்ஸி, மாவரைக்கும் இயந்திரம், வேஷ்டி, சேலைகூட வாங்க முடியாதவர்களாக மக்கள் இருக்கிறார்கள்? தமிழகத்தில் 2 கோடி பேர் மதுவுக்கு அடிமையான நோயாளிகளாக உள்ளனர். கணவரை இழந்த பெண்கள் தமிழகத்தில்தான் அதிகம். 13 தலைமுறைகளுக்கு ஒரு முறை மரபணு மாறிவிடும். நம் மரபணு மாறிவிட்டது. அதை மீட்டெடுக்க வரலாறு முக்கியம். இதைத்தான் நான் செய்கிறேன்.

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் 23 கட்சிகளுடன் கூட்டணி அமைத்துள்ளதற்கு தேர்தல் தோல்வி அச்சமே காரணம். மக்களவை உறுப்பினராக உள்ள திருமாவளவன் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடுவது ஏற்புடையதல்ல என்றார்.

திமுக தேர்தல் அறிக்கை நாயகன் அல்ல; நகைச்சுவை!

சென்னை, மார்ச் 30: திமுகவின் தேர்தல் அறிக்கை நாயகன் அல்ல; நகைச்சுவை என்றும், தோல்வி பயத்தின் வெளிப்பாடாகவே கடந்த தேர்தலில் அறிவிக்கப்பட்ட 63 வாக்குறுதிகள் மீண்டும் இடம்பெற்றுள்ளதாகவும் பாமக தலைவர் அன்புமணி விமர்சித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் எக்ஸ் தளத்தில் திங்கள்கிழமை வெளியிட்ட பதிவு:

2021 சட்டப்பேரவைத் தேர்தலில் 505 வாக்குறுதிகளை அளித்த திமுக, அவற்றில் வெறும் 66-யை நிறைவேற்றியது. 439 வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. தற்போது வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள 517 வாக்குறுதிகளில் 63 வாக்குறுதிகள் முந்தைய தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றிருந்தவை. அவற்றுக்கு வேறு பெயர்களைச்சூட்டி புதிய வாக்குறுதிகளாக காட்டியுள்ளது. திமுக தேர்தல் அறிக்கை என்பது கதாநாயகன் அல்ல; நகைச்சுவை என்று தெரிவித்துள்ளார்.

நயினார் நாகேந்திரன்: தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவு: கடந்த 2021 பேரவைத் தேர்தலில் அளித்த தேர்தல் வாக்குறுதிகளில் 90 சதவீதத்தை நிறைவேற்றாமல் வஞ்சித்துவிட்டு, மீண்டும் தேர்தல் வந்ததும் பழைய அறிக்கையைத் தூசி தட்டி புதிய வாக்குறுதிகள்போல திமுக நாடகமாடுகிறது. ஆனால், திமுகவின் பழைய வாக்குறுதிகளை மக்கள் மீண்டும் நம்பத் தயாராக இல்லை.

டிடிவி தினகரன்: அமமுக பொதுச் செயலர் டிடிவி தினகரன் திங்கள்கிழமை வெளியிட்ட அறிக்கையில், நீட் தேர்வு ரத்து, தமிழ் ஆட்சி மொழி, மாநில அரசின் பட்டியலில் கல்வி, கச்சத்தீவு மீட்பு ஆகிய வாக்குறுதிகளை மீண்டும் திமுக அளித்துள்ளது. அப்படியென்றால், ஏற்கெனவே அளித்த இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் கடந்த 5 ஆண்டுகளில் திமுக என்ன செய்து கொண்டிருந்தது? மாதம் ஒருமுறை மின்சாரக் கணக்கீடு என்று கடந்த தேர்தலில் வாக்குறுதி அளித்தது. ஆனால், அதை நிறைவேற்றாததால், இந்த தேர்தல் அறிக்கையில் மின்சாரம் என்ற தலைப்பையே திமுக தவிர்த்துள்ளது.

தொல்.திருமாவளவன் ஏப்.2-இல் வேட்பு மனு தாக்கல்

சென்னை, மார்ச் 30: விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் (தனி) தொகுதியில் ஏப்.2-ஆம் தேதி வேட்பு மனு தாக்கல் செய்கிறார்.

திமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு 8 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் காட்டுமன்னார்கோவில் தொகுதியில், போட்டியிடும் தொல்.திருமாவளவன், வரும் ஏப்.2-ஆம் தேதி வேட்பு மனு தாக்கல் செய்கிறார். இவர், இத்தொகுதியில் 2016-இல் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தார்.

கோபி தொகுதி தவெக வேட்பாளர் கே.ஏ.செங்கோட்டையன் வேட்புமனு

கோபி, மார்ச் 30: கோபி சட்டப் பேரவைத் தொகுதி தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் கே.ஏ.செங்கோட்டையன் திங்கள்கிழமை வேட்புமனு தாக்கல் செய்தார்.

ஈரோடு மாவட்டம், கோபி தவெக வேட்பாளராக அக்கட்சியின் மாநில நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் கே.ஏ.செங்கோட்டையன் அறிவிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், அவர் கோபி பேருந்து நிலையத்தில் ஏராளமான தொண்டர்கள் சூழ திறந்த வேனில் ஊர்வலமாகச் சென்றார். அப்போது, அங்கிருந்த மக்களிடம் விசில் சின்னத்துக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

பின்னர், கோபி கோட்டாட்சியர் அலுவலகத்துக்கு மாவட்டச் செயலாளர் பிரதீப்குமார் உள்ளிட்ட நான்கு பேருடன் வந்த கே.ஏ.செங்கோட்டையன், தேர்தல் நடத்தும் அலுவலர் சிவானந்தத்திடம் மனு தாக்கல் செய்தார்.

கோபி தொகுதியில் அதிமுக சார்பில் 8 முறை போட்டியிட்டு வெற்றிபெற்ற செங்கோட்டையன், அக்கட்சியில் இருந்து விலகி தவெகவில் இணைந்த பின் கோபி தொகுதியில் 9 -ஆவது முறையாக களம் காணவுள்ளார்.

வாக்காளர்களுக்கு பணம் அளிக்கும் விவகாரம் தொடர்பான மனு சென்னை உயர்நீதிமன்றத்துக்கு மாற்றம்

மதுரை, மார்ச் 30: வாக்காளர்களுக்கு பணம் அளிப்பதைத் தடுக்கும் வகையில் தேர்தல் விதிகளை அமல்படுத்தக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு, சென்னை உயர்நீதிமன்ற அமர்வுக்கு மாற்றம் செய்யப்பட்டது.

மதுரையைச் சேர்ந்த கே.கே.ரமேஷ், சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: தேர்தலின் போது வாக்காளர்களுக்கு வாக்குக்கு பணம் அளிப்பதைத் தடுக்கும் வகையில் தேர்தல் விதிகளை அமல்படுத்த வேண்டும். இதேபோல, அனைத்து அரசியல் கட்சியினரும் பிரசாரம் என்ற பெயரில் பொதுமக்களை திறந்தவெளியில் வெயிலில் நீண்ட நேரம் பங்கேற்க கட்டாயப்படுத்துவதை தடுக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட வேண்டும். தேர்தலின் போது சட்டவிரோதச் செயல்களை தடுக்க உத்தரவிட வேண்டும் என அவர் கோரினார்.

இந்த மனுவை அவசர வழக்காக விசாரிக்கக் கோரி, சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி, நீதிபதி என். சதீஷ்குமார் அமர்வில் முறையீடு செய்யப்பட்டது.

நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு: தேர்தல் தொடர்பான வழக்குகள் சென்னை உயர்நீதிமன்ற அமர்வில் விசாரணைக்கு எடுக்கப்படும். அதே விதிமுறையைப் பின்பற்றி இந்த வழக்கும் சென்னை உயர்நீதிமன்றத்துக்கு மாற்றப்படுகிறது. அங்கு விரைவில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றனர் நீதிபதிகள்.

முதல்கட்டமாக 5 வேட்பாளர்களை அறிவித்தார் ராமதாஸ்

விழுப்புரம், மார்ச் 30: தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் பாமகவின் முதல் கட்ட வேட்பாளர்கள் பட்டியலை அக்கட்சியின் தலைவர் மருத்துவர் ச.ராமதாஸ் திங்கள்கிழமை வெளியிட்டார்.

சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் பாமக வேட்பாளர்கள் முதல் பட்டியலை திங்கள்கிழமை அறிவித்த அக்கட்சியின் நிறுவனர் மருத்துவர் ச.ராமதாஸ். உடன், செயல் தலைவர் ஸ்ரீகாந்தி, கௌரவத் தலைவர் ஜி.கே.மணி மற்றும் வேட்பாளர்கள்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் சசிகலாவை பொதுச் செயலராகக் கொண்ட அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகத்துடன் இணைந்து பாட்டாளி மக்கள் கட்சி (ராமதாஸ் தரப்பு) களம் காண்கிறது.

தேர்தலில் இரு கட்சிகளும் கூட்டணி அமைத்து போட்டியிடுவதென முடிவு செய்திருந்த நிலையில், வேட்பாளர்கள் பட்டியல் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டம், தைலாபுரம் தோட்டத்தில் திங்கள்கிழமை இரவு நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பாமக நிறுவனர் ச.ராமதாஸ், செயல் தலைவர் ஸ்ரீகாந்தி, கௌரவத் தலைவர் ஜி.கே.மணி உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர். கூட்டத்தில் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர், முதல்கட்ட வேட்பாளர் பட்டியலை மருத்துவர் ச.ராமதாஸ் வெளியிட்டார்.

வேட்பாளர்களின் விவரம்:

1. சேலம் மேற்கு - பாமக மாநில இணைப் பொதுச் செயலரும், தற்போதைய எம்எல்ஏவுமான இரா. அருள்.
2. வந்தவாசி - கட்சியின் பொதுச் செயலர் ச.முரளிசங்கர்.
3. கும்பகோணம் - மாநில நிர்வாகக் குழு உறுப்பினர், மாவட்டச் செயலர் மற்றும் ஆடுதுறை பேரூராட்சி தலைவருமான ம.க.ஸ்டாலின்.
4. விருத்தாசலம் - மாவட்டச் செயலர் இ.கே.சுரேஷ்.
5. மயிலாடுதுறை - மாவட்டச் செயலர் பாக்கம் சக்திவேல் ஆகியோர் போட்டியிடுவதாகக் கூறி, அவர்களின் பட்டியலை கட்சியின் நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டு, வேட்பாளர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

பொது அறிவிப்பு

மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் State Level Environment Impact Assessment Authority (SEIAA) தமிழ்நாடு கோப்பு எண் 13279 நாள் 27/03/2026 Ec identification No; EC 26B0108T-N5735075Nன் படி தி/ள்.ஸ்ரீ துர்காம்பிகா புளூ மெட்டல்ஸ், No.1A/115, கண்டித்தான்குளம், தருவை கிராமம், பாளையங்கோட்டை வட்டம், திருநெல்வேலி மாவட்டம் 627356, தமிழ்நாடு, அவர்களுக்கு புல எண் 570(P) மற்றும் 571(P) தருவை கிராமம், பாளையங்கோட்டை வட்டம், திருநெல்வேலி மாவட்டம், அவர்களுக்கு 1.95.50 ஹெக்டேர் பரப்பளவில் ரப் ஸ்டோன், ஜல்லி மற்றும் கிராவல் குவாரி நடத்துவதற்கு சுற்றுச்சூழல் தடையில்லா சான்று வழங்கியுள்ளது மேற்காணும் விவரத்தை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (SEIAA) தமிழ்நாடு இணைய தளத்தில் <https://parivesh.nic.in> தெரிந்து கொள்ளலாம்.

ARMB எர்ணாகுளம்

PNB ஹவுஸ், மார்கெட் சாலை, எர்ணாகுளம்-682 011
தொலைபேசி: 0484-2350477 மின்னஞ்சல்: CS4459@pnb.bank.in

அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை சொக்கவைக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6)- வாக்குறுதியின் கீழான அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு. இதன் மூலம் பொதுமக்களுக்கும் மனுதாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், கீழே விவரிக்கப்பட்டுள்ள ஈடு பெற்றுக் கடனளித்த வங்கியிடம் அடமானம்/ அடகு வைக்கப்பட்டுள்ளதும் ஈடு பெற்றுக் கடனளித்தவரின் / வங்கியின் அதிகாரப்படியான அலுவலரால் ஆக்கப்பூர்வமாக நேரடி அடமான கவராதியாக செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி"** மற்றும் **"உள்ளது என்னென்ன அது"** என்கிற முறையில் கீழே குறிப்பிட்டுள்ள நாள்களில் அந்தந்த கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களிடம் இருந்து ஈடு பெற்றுக் கடனளித்தவருக்கு/ வங்கிக்கு, வரவேண்டிய நிலுவைத்தொகைகளை வருவிப்பதற்குப் பொருட்டு விற்பனை செய்யப்பட உள்ளது. கீழே உள்ள அட்டவணையில் அந்தந்த சொத்துகளுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள குறைந்தபட்ச கேட்பு விலையும் மேலணிதொகையும் இருக்கும்.

ஏலம் நடக்கும் நாள்: 17-04-2026 காலை 11.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை

கிளையின் பெயர், கணக்கின் பெயர், கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர் & முகவரி	அடமானத்திலுள்ள அசையாத் சொத்தின் விபரம் / பாதித்தரப்பார் பெயர் (சொத்து (களின்) அடமானதாரர்)	அ) சர்ஃபாசி சட்டம் 2002-இன் பிரிவு 13(2)-இன் கீழான கோரிக்கை அறிவிப்பு நாள் ஆ) நிலுவைத் தொகை இ) சர்ஃபாசி சட்டம் 2002-இன் பிரிவு 13(4)-இன் கீழான கவராதி நாள் இ.கவராதி வகையை அடையாளம்/ நேரடி/ ஆக்கப்பூர்வம்
PNB, ARMB எர்ணாகுளம் M/s சோத்தி எண்டெர்பிரைசஸ் பிரதிநிதி நாள் 24, கில்லிக்கொல்லூர், கொல்லம்-691004. திரு.உன்னிகிருஷ்ணன் R, திருமதி.சதுரா, இந்த இருவர் முகவரி: வடக்கும்பாகத்து வீடு, பிரதிநிதி நாள், கில்லிக்கொல்லூர், கொல்லம்-691004. திருமதி.ஸ்ரீதா தேவி, திருமதி.ஸ்ரீலட்சுமி, இந்த இருவர் முகவரி : இந்திரா பவன், குண்டரா அஞ்சல், கொல்லம்-691501.	(1). பகுதி ஒப்படைப்பு ஆவணம் செய்யப்பட்ட இன்றியமையாத பகுதிகளும் பாகங்களும் கொண்ட 148 சென்ட் நிலம் மற்றும் முழுமித் தொழிற்சாலையை உள்ளடக்கிய சொத்து அமைப்பு: மனு எண் எண்.138/10, 11, 12, 13, 14 மற்றும் 15, குலப்பாக் கிராமம், அளவிக்கரை, கண்ணமாலுவி மாவட்டம், தமிழ்நாடு இது காவல்சேரி ஊராட்சியின் பிரிவை அல்லது கருவூலத்தின் சொத்து **எல்லைகள்: வடக்கு:** வேலைக்குப் அமர்வின் சொத்து; **தெற்கு:** வரிதா அமர்வின் சொத்து; **கிழக்கு:** ஏப்ல் கேட்டம்; **மேற்கு:** தார் சாலை. (2). பகுதி ஒப்படைப்பு ஆவணம் செய்யப்பட்ட இன்றியமையாத பகுதிகளும் பாகங்களும் கொண்ட 4.61 ஏர் (11.40 சென்ட்) நிலத்தை உள்ளடக்கிய சொத்து அமைப்பு: மனு எண் எண்.711/17, 711/21-1, கில்லிக்கொல்லூர் கிராமம், கொல்லம் வட்டம் மாவட்டம் **எல்லைகள்: வடக்கு:** நவீனமாக்கி அம்பா; **கிழக்கு:** உதயநாராயணன் சொத்து; **தெற்கு:** வரிதா அமர்வின் சொத்து; **மேற்கு:** வரிதா தேவி அமர்வின் சொத்து.	

சொத்து -1 : குறைந்தபட்ச கேட்பு விலை : ரூ. 2,75,37,000/- • டேவணித்தொகை: ரூ. 27,53,700/- • ஏல உயர்வுத்தொகை : ரூ.10,000/-
சொத்து -2 : குறைந்தபட்ச கேட்பு விலை : ரூ.1,43,47,000/- • டேவணித்தொகை: ரூ.14,34,700/- • ஏல உயர்வுத்தொகை: ரூ.10,000/-

விதிகள் மற்றும் நிபந்தனைகள்: 1. விற்பனையானது கடனீட்டு சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002-இன் விலக்கப்பட்டுள்ள விதிகள் & நிபந்தனைகளுக்கும் மேலும் பின்வரும் கூடுதல் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டது. 2. சொத்துகள் **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி"** மற்றும் **"உள்ளது என்னென்ன அது"** என்கிற முறையில் விற்கப்படும். 3. மேற்கு அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கடனீட்டு சொத்துகளின் விபரங்கள் அதிகாரப்பூர்வ அலுவலரின் உச்சபட்ச தகவலுக்கு எட்டியவை மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்த அறிவிப்பு பிரசுரத்தில் ஏதேனும் பிழைகள், தவறுகள், அல்லது விடுபடல்கள் ஏதேனும் இருந்தால் அதில் பங்கெடுக்க உரிமைப்பட்டவர் அல்ல. 4. தொடர்பு கைப்பணியின் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லையெனில், அவற்றை முழுமையாக நிராகரிக்கவோ அல்லது அவரவரின் கைவசமுள்ள மட்டும் ஏற்றுக்கொள்ளவோ அதிகாரப்பூர்வ அலுவலருக்கு உரிமை உண்டு. மேலும், எவ்வித எவ்வித காரணமும் குறிப்பிடாமலோ எதெதற்கோ ஒத்திவைக்கவோ, ரத்து செய்யவோ, நான்பிடிடவோ, நிறுத்தவோ அல்லது ஏல விற்பனையை மாற்றியமைக்கவோ அவருக்கு முழு உரிமை உண்டு; இது தொடர்பாக அவர் எடுக்கும் முடிவே இறுதியானது. 5. கடனீட்டு சொத்தானது, குறைந்தபட்ச கேட்பு விலைக்கு குறைவாக விற்பனை செய்யப்பட மாட்டாது. 6. இந்த விற்பனையானது, கீழே கையொப்பமிட்டுள்ள அலுவலரால், https://Baanknet.com என்ற இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ள மின்-ஏலத் தளம் வாயிலாக, 17-04-2026 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை நடத்தப்படும். 7. விற்பனையின் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளை அறிய, தயவுகூர்ந்து https://Baanknet.com & www.pnb.bank.in ஆகியவற்றை பார்வையிடுங்கள்.

நாள்: 26-03-2026, இடம் : எர்ணாகுளம்

(ஒம்) அதிகாரப்பூர்வ அலுவலர், பஞ்சாப் நேஷனல் பேங்க் A.R.M.B., எர்ணாகுளம்.

IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட்

(முன்பு கே